# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION

(Recognized by the Govt of Tamilnadu, G.O.No.341, Dt.22.03.1980)

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
Phone : 044-28414354, Email : drmanjunaths@gmail.com, Website : www.tngcta.org


## உயர்மட்டக்குழு கூட்டம்

**இடம் : பாரதியார் பல்கலைக்கழக வளாகம், கோவை**
**தேதி : 01.12.2018 (சனிக்கிழமை)**

## தீர்மானங்கள்

தோழர்களே, தோழியர்களே,

வணக்கம்.....!

நமது கழகத்தின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று (01.12.2018 - சனிக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில், கோவை, பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில், கழக நடவடிக்கைகள் குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1. பெரும்பாலான கல்லூரிகள் 06.12.2018 அன்று பருவத் தேர்வு விடுமுறை முடித்து திறக்கப்பட்டுவிடுவதால், JAC-இன் முடிவை கருத்தில் கொண்டு, **07.12.2018 முதல் TNGCTA உறுப்பினர்கள் அனைவரும் ஜேக்டோ-ஜியோ வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது** எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. மேலும், 07.12.2018 மற்றும் அதற்குப் பின்னர் திறக்கப்படும் கல்லூரிகளில், உறுப்பினர்கள் முதல் வேலை நாள் கையொப்பமிட்டு, அடுத்த நாளிலிருந்து வேலை நிறுத்தத்தில் பங்கு பெற வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. இது தவிர, 04.12.2018 முதல் நடைபெறும் **ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட அனைத்து ஜேக்டோ-ஜியோ போராட்டங்களிலும் அனைத்து உறுப்பினர்களும் பங்கு பெறுவது** எனவும் தீர்மானிக்கப்பட்டது (போராட்ட வடிவம், நாள், இடம், ஒருங்கிணைப்பாளர்கள் குறித்த விவரங்கள் மண்டலச் செயலர்களுக்கு வழங்கப்படும்).

4. நமது கழக **மாநாட்டு நிதியை (ரூ.1000/-) டிசம்பர் 15-ஆம் தேதிக்குள்** செலுத்தி, செலுத்தியவர்கள் பட்டியலையும் மாநாட்டுப் பொருளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5. கோவை மாநில மாநாட்டில் கலந்து கொள்வோருக்கான **பேராளர் கட்டணம் (ரூ.250/-) டிசம்பர் 15-ஆம் தேதிக்குள்** செலுத்தப்படவேண்டும். மேலும், கிளைச்செயலர்கள் தங்கள் கிளைகளிலிருந்து **மாநாட்டில் கலந்து கொள்வோர் பட்டியலை** (விருப்ப உணவு வகை : சைவம் / அசைவம் எனக் குறிப்பிட்டு) மாநாட்டுச் செயலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்
TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION
(Recognized by the Govt of Tamilnadu, G.O.No.341, Dt.22.03.1980)
பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
Phone : 044-28414354, Email : drmanjunaths@gmail.com, Website : www.tngcta.org

6. **குடும்ப நல நிதி** (ரூ.1100/-), **மாநில சந்தா** (2017-18 மற்றும் 2018 -19 ஆண்டுகளுக்காக மாநில வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டிய சந்தா தொகை ரூ.200/- + ரூ.400/-) ஆகிய **அனைத்து நிதிகளையும் டிசம்பர் 25-ஆம் தேதிக்குள்** அனைத்து கிளைகளும் செலுத்திடல் வேண்டும்.

7. மண்டலச்செயலர்கள் தங்கள் மண்டலத்திற்கு உட்பட்ட **கிளைக் கழகங்கள் இந்நிதிகளைச் செலுத்தியதை உறுதி செய்து**, உரிய இரசீதுகளை, பொருளரிடமிருந்து கிளைகளுக்குப் பெற்றுத்தர உறுதுணையாக இருக்க வேண்டும்.

8. அனைத்து மண்டலங்களிலும் உள்ள அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு இம்மாநாட்டுக் கருத்தரங்கத் தலைப்பான ***அனைவருக்கும் தரமான உயர்கல்வி - சவால்களும் சாதனைகளும்*** எனும் தலைப்பில் **பேச்சுப் போட்டி** மற்றும் **கட்டுரைப் போட்டி** நடத்தி, **முதல் பரிசு பெறும் மாணவ மாணவிகளை** மாநாட்டுக்கு அழைத்து வந்து பரிசுகளை மாநில மாநாட்டில் பெறுவதற்கான ஒருங்கிணைப்பை மண்டல & கிளைப் பொறுப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும்.

9. தமிழகத்தின் 4 மாவட்டங்களில் ஏற்பட்ட **கஜா புயல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நமது உறவுகளுக்கு உதவும் வண்ணம்**, தமிழக அரசின் அரசாணைப்படி, நமது உறுப்பினர்கள் அனைவரும் இம்மாதத்தில் **ஒருநாள் ஊதியத்தை** கட்டாயம் வழங்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10. கடந்த 25.10.2018 அன்றைய **கல்லூரிக்கல்வி இயக்குநருடனான பேச்சுவார்த்தையில் உறுதியளித்தபடி**, இயக்குனரகத்தால் கோப்புகள் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவலை பொதுச்செயலர் தெரிவித்தார். **தர ஊதியம், ஊக்கத்தொகை முதலிய முக்கியமான அக்கோரிக்கைகளுக்கு அரசாணைகளை விரைந்து பெறத்** தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மாநில ஆட்சிக்குழு உறுதியளித்தது.

11. நமது கழகத்தின் **இணையதளம் (www.tngcta.org) மேம்படுத்தப்பட்டுள்ளது**. மேலும், நமது கழகத்தின் அனைத்து **மண்டலங்கள், கிளைகள், பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரங்களை** ஒருங்கிணைத்து வழங்கும் வண்ணம் **மென்பொருள்** உருவாக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இதற்கான உள்ளீடுகளை, **தகவல் & தொழில்நுட்ப குழு** வழங்கியுள்ள எக்ஸெல் படிவ மாதிரியில் (www.tngcta.org) பூர்த்தி செய்து **04.12.2018 தேதிக்குள்** உடனடியாக tngcta1971@gmail.com எனும் இ-மெயில் முகவரிக்கு கிளைச்செயலர்கள் அனுப்பி வைக்கவேண்டுமெனவும், சார்ந்த மண்டலச் செயலர்கள் இதனை உறுதி செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**- இரா.தாமோதரன்**
பொதுச்செயலர், TNGCTA
தேதி : 02.12.2018